[24th January 1964

திரு. அ. ராகவ ரெட்டி : சார், மற்ற மாவட்டங்களை விட செங்கல்பட்டு, தென்னுற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் குறைவாகத் தேர்ச்சி பெற்று இருப்பதாகத் தெரிகிறதே, அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பர்சென்டேஜைப் பார்த்தால் குறைவு இல்லை; ஆனல் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்.

Disbursement of salaries to teachers in North Arcot district

*87 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the teachers and other staff of the high schools in the North Arcot district due to the late payment of salaries every month ; and

(*b*) if so the action taken by the Government for the payment of their salaries by the first week of every month.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) In the month of February 1963, salaries of the staff of the 20 Board High Schools out of 120 schools in the North Arcot district were not paid till 20th February 1963. There were no other late payments of salaries.

(*b*) Specific instructions have been issued to all headmasters of schools to prepare and submit the pay bills for each month so as to reach the office of the Special District Educational Officer, North Arcot, on or before 23rd of each month. Prompt payment of salary before the first week of every month has been ensured since February 1963.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பணத் தட்டுப்பாடு இல்லை என்றாலும், ஆசிரியர்களுடைய சம்பளம் சில நேரங்களிலே தாமதப்படுத்தப்படுகின்றன. எந்த எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிறுத்தி வைக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்த சந்தர்ப்பத்தில் சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டது என்பதற்கு தகவல் இல்லை.

திரு. ம. கமலநாதன் : சர்விஸ் ரெஜிஸ்டர் திறக்கவில்லை என்பதற்காக சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தால், அப்படி சர்விஸ் ரெஜிஸ்டர் கொடுப்பது நிர்வாகத்தின் பொருப்பு அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.